**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05–ஆம் நாள் சனிக்கிழமை**
**அசல் வழக்கு எண் – 312/2017**
**CNR No:TNAL050003952017**

சக்கரபாணி, வயது 75, த/பெ.ஸ்ரீரங்கமுதலியார்,
வெள்ளைபிள்ளையார்கோவில் தெரு, கஸ்பா உடையார்பாளையம்,
உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம். – வாதி

/எதிர்/

1. வைத்திலிங்க முதலியார், வயது 80, த/பெ.சின்னதம்பி முதலியார்,
கைலாசபுரம் கிராமம், மீன்சுருட்டி அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

2. சாமிதுரை, வயது 65, த/பெ.மாணிக்கம்,
இரும்புலிக்குறிச்சி கிராமம், செந்துறை மெயின்ரோடு,
செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம். – பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 29.11.2017 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 29.11.2017 |
| வியாஜ்ஜிய மூலம் | : | 25.11.2017 |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : | Rs.2000/– |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | Rs.151/– |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : | Rs.151/– |
| நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு | : | 31, 27(c),TNCF Act |

வாதி தாவா 1–வது அயிட்ட சொத்திற்கு சென்று வரும் பாதையான தாவா வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 2–வது அயிட்ட சொத்தான ABCD பகுதி வாதியின் புழங்குரிமை பாதையாக விளம்புகை செய்து பரிகாரம் வழங்க வேண்டியும், தாவா 2 மற்றும் 3–வது அயிட்ட சொத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ABCD பாதையிலும் ABEFGHA பாதையிலும் வாதிக்குள்ள பாதை பாத்தியத்தை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் ஆக்கிரமிப்பும் செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், தாவா

செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், மற்றும் இவ்வழக்கின் தன்மைக்கேற்ப சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தம்யுக்தமாய் கருதும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கி வாதிக்கு சாதகமான தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கிட வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 05.08.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும், முதல்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ஜெய்சங்கர் அவர்கள் முன்னிலையாகியும், 2–வது பிரதிவாதி தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்பாணை

1. வாதி அழைத்தும் ஆஜரில்லை. வழக்கு தள்ளிவைக்கப்பட்டு மீண்டும் 3.30 மணிக்கு அழைக்கப்பட்டது யாரும் ஆஜரில்லை.

2) இன்று இவ்வழக்கு சிறப்பு பட்டியல் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது. இந்நிலையில் வாதியின் வருகை அவசியமாகிறது..

3) வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை.

4) எனவே நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

## சொத்து விபரம்

தாவா 1–வது அயிட்டம்;

அரியலூர் ரிடி, உடையார்பாளையம் தாலுக்கா, உடையார்பாளையம் சார்பதிவகம், கஸ்பா உடையார்பாளையம் வெள்ளைக்கல்பிள்ளையார்கோவில் தெருவில், அ.பு.ரீ சர்வே எண்.61/5–ல் 0.44 செண்டில் மேல்புரம் கோவிந்தசாமி முதலியார் நிலத்திற்கு (கிழக்கு), புறம்போக்கு நந்தவனத்திற்கு தற்சமயம் தாவா 2–வது அயிட்ட சொத்திற்கு (வடக்கு), வீரப்ப முதலியார், நடராஜன் வீடு மனைக்கு (மேற்கு), மணி பூசி நிலத்திற்க்கு (தெற்கு) இதில் 0.14 1/3 உள்ள நிலம் மேற்படி நிலத்திற்கு தென்புரம் கீழ்மேல் ஜாதியடி 45 ½ வடபுரம் 41 ½ தென்வடல் ஜாதியடி 131 உள்ளது. மேற்படி நிலத்திற்கு தெற்கே உள்ள ரஸ்தாவிலிருந்து புறம்போக்கு நந்தவனத்தின் நடுவில் (தாவா 2–வது அயிட்ட சொத்து) கீழ்மேல் ஜாதியடி 10

அகலமுள்ள பொது நடப்பு வழியாக மேற்படி நிலத்திற்கு நான் போக வர நடந்துவந்த வழக்கம் போல் தாங்களும் போகவர நடந்துகொள்ள வேண்டியது.

<u>தாவா 2–வது அயிட்டம்;</u>

அரியலூர் ரிடி, உடையார்பாளையம் தாலுக்கா, உடையார்பாளையம் சார்பதிவகம், கஸ்பா உடையார்பாளையம் வெள்ளைக்கல்பிள்ளையார்கோவில் தெருவில் நத்தம் சர்வே எண்.427/C–ல் தாவா வரைபடத்தில் ABCD என குறிப்பிடப்பட்டுள்ள கீழ்மேல் 13 மீட்டர், தென்வடல் 2.2 மீட்டர் அளவுள்ள பாதை பகுதி. நான்கெல்லை; வாதிக்கு சொந்தமான 1வது அயிட்ட சொத்திற்கு (தெற்கு), 1வது பிரதிவாதியின் இடத்திற்கு (வடக்கு), 3வது அயிட்ட பாதைக்கு (மேற்கு), சுப்ரமணியன் வீடு மனைக்கு(கிழக்கு)

<u>தாவா 3–வது அயிட்டம்;</u>

அரியலூர் ரிடி, உடையார்பாளையம் தாலுக்கா, உடையார்பாளையம் சார்பதிவகம், கஸ்பா உடையார்பாளையம் வெள்ளைக்கல்பிள்ளையார்கோவில் தெருவில் நத்தம் சர்வே எண்.427/D–ல் தாவா வரைபடத்தில் ABEFGHA என குறிப்பிடப்பட்டுள்ள கீழ்மேல் 3.8 மீட்டர், தென்வடல் மேல்புரம் 21.2 மீட்டர் கீழ்புரம் 22.4 மீட்டர் அளவுள்ள பாதை பகுதி நான்கெல்லை; 1–ம் பிரதிவாதி மனைக்கும், 2–வது அயிட்ட சொத்திற்கும் (கிழக்கு), கலியபெருமாள் வீடுமனைக்கும் தாவா வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள GH புள்ளிக்கும் (மேற்கு), ரோட்டிற்கு (வடக்கு), தாவா வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள HA புள்ளிக்கு (தெற்கு).

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையையில் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

-------------------------

கூடுதல்மாவட்டஉரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.312/2017
தீர்ப்பாணை
நாள்: 05.08.2023

-------------------------